www.Padasalai.Net www.TrbTnpsc.com

V12Acc

விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2025

வகுப்பு 12

கால அளவு : 3 மணிநேரம் **கணக்குப்பதிவியல்** மதிப்பெண்கள் : 90

பகுதி-I

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.** **20×1=20**

1) கடனாளிகள் தொடக்க இருப்பு ரூ.30,000; பெற்ற ரொக்கம் ரூ.1,00,000; கடன் விற்பனை ரூ.90,000; கடனாளி இறுதி இருப்பு ..........

a) ரூ.30,000 b) ரூ.1,30,000 c) ரூ.40,000 d) ரூ.20,000

2) பொறுப்புகளை காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துக்கள்

a) நட்டம் b) ரொக்கம் c) முதல் d) இலாபம்

3) உயில் கொடை ______.

a) முதலின வரவு b) வருவாயின வரவு

c) வருவாயின செலவு d) முதலின செலவு

4) பெறுதல் செலுத்தல் கணக்கு இருப்பு காட்டுவது

a) இலாபம் b) நட்டம்

c) அந்நாளைய ரொக்க வங்கியிருப்பு d) அந்நாளைய வருமானம்

5) எடுப்பு மீது வட்டி, முதல் மீது வட்டி மற்றும் ஊதியம் கழித்த பின் உள்ள இலாபம் ரூ.10,500, கீதா என்ற கூட்டாளி கழிவுக்கு பின் உள்ள நிகர இலாபத்தில் 5% கழிவு பெற உரியவராயின் கழிவு தொகையை கண்டறியவும்

a) ரூ.50 b) ரூ.150 c) ரூ.500 d) ரூ.550

6) பின்வருவனவற்றில் எது இலாபநட்ட பகிர்வு கணக்கில் காட்டபடும்

a) அலுவலக செலவுகள் b) பணியாளர் ஊதியம்

c) கூட்டாளி ஊதியம் d) கடன் மீதான வட்டி

7) உயர் இலாபம் பின்வரும் இரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாடு ஆகும்

a) முதல் மற்றும் சராசரி இலாபம் b) சொத்து மற்றும் பொறுப்புகள்

c) சராசரி இலாபம் மற்றும் சாதாரண இலாபம் d) வருமானம் மற்றும் செலவு

8) சரியற்ற இணையினை அடையாளம் காணவும்

a) சராசரி இலாப முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

b) உயர் இலாப முறையில் நற்பெயர் = உயர் இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

c) ஆண்டு தொகை முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் × ஆண்டு தொகை காரணியின் தற்போதைய மதிப்பு

d) கூட்டு சராசரி இலாப முறையில் நற்பெயர் = கூட்டு சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

9) கூட்டாளி சேர்ப்பின் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மறுமதிப்பீடு செய்யும் போது ஏற்படும் இலாபம் (அல்லது) நட்டம் யாருடைய முதல் கணக்கிற்கு மாற்றபடுகிறது

a) பழைய கூட்டாளிகள் b) புதிய கூட்டாளிகள்

c) அனைத்து கூட்டாளிகள் d) தியாகம் செய்த கூட்டாளிகள்

10) பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும்.

a) மறுமதிப்பீட்டு இலாபம் b) பகிர்ந்தளிக்கபடாத இலாபம்

c) புதிய கூட்டாளி கொண்டு வந்த நற்பெயர் d) முதலீட்டு மாறுபடும் நிதி

11) கூட்டாளி விலகலின் போது பொதுகாப்பு மாற்றபடுவது

a) அனைத்து கூட்டாளி முதல் க/கு b) மறுமதிப்பீட்டு க/கு

c) தொடரும் கூட்டாளி முதல் க/கு d) மேற்கண்ட எதுவுமில்லை

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



12) X, Y, Z என்ற கூட்டாளிகள் இலாபநட்டங்களை சமமாக பகிர்ந்துவந்தனர் 2018 ஏப்ரல் 1 அன்று X இறந்துவிட்டார். 2018ல் இலாபம் ரூ.36,000 என்ற அடிப்படையில் 2019 ஆம் ஆண்டுக்குறிய இலாபத்தில் Xன் பங்கினை கண்டறியவும்.
a) ரூ.1000 b) ரூ.3000 c) ரூ.12,000 d) ரூ.36,000

13) முன்னுரிமை பங்கு என்பது
(i) நிலையான பங்காதாயம் பெறுவதற்கான முன்னுரிமை பெற்ற பங்கு
(ii) கலைப்பின் போது பங்கு முதலை பெறுவதில் முன்னுரிமை
a) (i) மட்டும் சரியானது b) (ii) சரியானது
c) (i) மற்றும் (ii) சரியானது d) (i) மற்றும் (ii) தவறானது

14) பின்வரும் வாக்கியங்களில் எது தவறானது?
a) வெளியிட்ட பங்கு முதல் அங்கிகரிக்கபட்ட பங்குமுதலை விட ஒரு போதும் அதிகமாக இருக்க கூடாது
b) பங்குகள் குறை ஒப்பமாக இருக்கும் நிலையில் வெளியிட்ட பங்கு முதல் ஒப்பிய பங்குமுதலை விட குறைவாக இருக்கும்
c) காப்பு முதல் நிறுமத்தை கலைக்கும் போது செலுத்துமாறு அழைப்புவிடுக்கிறது
d) செலுத்தபட்ட பங்குமுதல் அழைக்கபட்ட பங்குமுதலின் ஒரு பகுதி

15) இருப்புநிலை குறிப்பு வணிக நிறுவனத்தின் நிதிநிலை பற்றிய தகவல்களை வழங்குகிறது
a) ஒரு காலகட்டத்திற்கு மேலான b) ஒரு குறிப்பிட்ட நாளுக்குரிய
c) குறிப்பிட்ட காலத்திற்கான d) குறிப்பிட்ட கணக்காண்டுக்குரிய

16) ஒரு பொது அளவு இருப்புநிலை குறிப்பில் நீண்ட கால சொத்துக்களின் சதவீதம் 75 எனில் நடப்பு சொத்துகளின் சதவீதம் ______.
a) 175 b) 125 c) 25 d) 100

17) ஒரு இனம் மற்றொரு இனத்தோடு பெற்றிருக்கும் தொடர்பினை கணிதவியல் முறையில் கூறுவது
a) முடிவு b) விகிதம் c) மாதிரி d) தீர்மானம்

18) பங்குதாரர் நிதிக்கும் மொத்த சொத்துக்களுக்கும் உள்ள விகிதாச்சாரம்
a) உரிமையாளர் விகிதம் b) முதல் உந்துதிறன் விகிதம்
c) புற அக பொறுப்பு விகிதம் d) நடப்பு விகிதம்

19) மதிப்பு கூட்டபட்ட வரி என்பது ______.
a) GST b) TDS c) VAT d) எதுவுமில்லை

20) தேய்மானம் வாராக்கடன் ஒதுக்கு பதிவு செய்வதன் பயன்படும் சான்றாவணம்
a) கொள்முதல் சான்றாவணம் b) விற்பனை சான்றாவணம்
c) எதிர்ப்பதிவு சான்றாவணம் d) உரிய குறிப்பேட்டு சான்றாவணம்

## பகுதி-II

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி.** **7×2=14**

**வினா எண் 30க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

21) முழுமை பெறா பதிவேடுகள் என்றால் என்ன?

22) இலாப நோக்கற்ற அமைப்பில் வருவாயின வரவுகள் ஏதேனும் 4 தரவும்.

23) கூட்டாளி ஒருவருக்கு முதல் மீது வட்டி அனுமதிக்க மேற்கொள்ள வேண்டிய குறிப்பேட்டு பதிவு யாது?

24) கூட்டாண்மை நிறுவனத்தில் நற்பெயர் மதிப்பிடும் சூழ்நிலைகளை தரவும்.

25) கீழ்கண்ட நிலைகளில் இயக்க இலாப விகிதம் காண்க.
விற்பனை மூலம் பெற்ற வருவாய் ரூ.10,00,000 ; இயக்க இலாபம் ரூ.1,50,000

26) குமார் நிறுமத்தின் பின்வரும் விவரங்களில் இருந்து 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பொது அளவு வருமான அறிக்கை தயார் செய்க.

| விவரம் | 2017-18 (ரூ.) |
|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 5,00,000 |
| இதர வருமானம் | 20,000 |
| செலவுகள் | 3,00,000 |

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



27) பின்வரும் விவரங்களில் இருந்து 2018 டிசம்பர் 31 ஆம் நாளைய முதலை கண்டறியவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018 ஜனவரி 1 அன்று முதல் | 1,00,000 |
| எடுப்பு | 30,000 |
| கூடுதல் முதல் | 15,000 |
| இலாபம் | 60,000 |

28) வேலன் என்ற கூட்டாளி 2018 ஏப்ரல் 1 அன்று ரூ.20,000 எடுத்து கொண்டார் எடுப்பு மீது வட்டி ஆண்டுக்கு 10% என கணக்கிட வேண்டும். மாறுபடும் முதல் முறை என கொண்டு 2018 டிசம்பர் 31 அன்று எடுப்பு மீது வட்டி கணக்கிடுக அதற்கான குறிப்பேட்டு பதிவு தருக.

29) ஏதேனும் 5 கணக்கியல் அறிக்கைகளை கூறு.

30) கிடைமட்ட பகுப்பாய்வு என்றால் என்ன?

## பகுதி-III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி.** **7×3=21**

**வினா எண் 40க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

31) விகித பகுப்பாய்வின் நன்மைகள் மூன்று தரவும்.

32) Tally ERP9 ல் பொதுவாக பயன்படுத்தபடும் சான்றாவணங்களின் வகைகளை குறிப்பிடவும்.

33) ஒப்பீட்டு அறிக்கையில் உள்ளபடி நிலைகள் யாவை?

34) ஒரு மன்றத்தின் தொடர்புடைய பின்வரும் விவரங்களில் இருந்து 2018 ஆம் ஆண்டில் சந்தா மூலம்பெறும் வருவாயை கணக்கிடவும்.

| விவரம் | 1.1.2018 | 31.12.2018 |
|---|---|---|
| சந்தா பெற வேண்டியது | 3,000 | 5,000 |
| முன்கூட்டி பெற்ற சந்தா | 4,000 | 7,000 |

35) கெவின் மற்றும் பிரான்சிஸ் இருவரும் கூட்டாளிகள் கெவின் ஒவ்வொரு காலாண்டு இறுதியில் ரூ.5000 எடுத்து கொண்டார். எடுப்பு மீது வட்டி ஆண்டுக்கு 6%. 2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுகுரிய எடுப்பு மீது வட்டி சராசரி கால முறையை பயன்படுத்தி கணக்கிடவும்.

36) நிவேதா வரையறு நிறுமம் ரூ.10 மதிப்பிலான 1000 நேர்மை பங்குகளை அழைப்பு தொகை பங்கொன்றுக்கு ரூ.4 செலுத்தவில்லை இதை ஒறுப்பிழப்பு செய்து இதில் பங்கொன்றுக்கு 7 வீதம் 800 பங்குகளை மறுவெளியீடு செய்யபட்டன - ஒறுப்பிழப்பு மறுவெளியீடுகான குறிப்பேட்டு பதிவு தரவும்.

37) டேனியில் நிறுமத்தின் பின்வரும் தகவல்களில் இருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையை தயார் செய்க.

| விவரம் | 2015-16 | 2016-17 |
|---|---|---|
| விற்பனை மூலம்பெற்ற வருவாய் | 40,000 | 50,000 |
| இயக்க செலவுகள் | 25,000 | 27,500 |
| வருமான வரி | 30% | 30% |

38) சானியா வரையறு நிறுமத்தின் கொடுக்கபட்ட தகவல்களில் இருந்து சரக்கிருப்பு சுழற்சி விகிதம் காண்க.

| விவரம் | ரூ. |
|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 1,90,000 |
| தொடக்க சரக்கிருப்பு | 40,000 |
| இறுதி சரக்கிருப்பு | 20,000 |
| கொள்முதல் | 90,000 |
| உள்தூக்கு கூலி | 10,000 |

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



39) அனில், சுனில் மற்றும் ஹரி என்ற கூட்டாளிகள் 4:3:3 என்ற விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர் அவர்கள் ராஜா என்பவரை 20% லாபத்திற்கு கூட்டாளியாக சேர்ந்தனர், புதிய இலாப பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

40) Tally ERP9 ல் கீழ்காண்பனவற்றை பார்வையிடுவதற்கான நுழைவு வாயிலை எழுதுக.
(i) இலாப நட்ட க/கு (ii) இருப்புநிலை குறிப்பு (iii) நாளேடு

## பகுதி-IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 7×5=35

41) a) 2018 ஏப்ரல் 1 அன்று சுபா தன்னுடைய தொழிலை ரூ.1,20,000 முதலுடன் தொடங்கினார். அவர் முறையான கணக்கு ஏடுகளை பராமரிக்கவில்லை 2019 மார்ச் 31 அன்று அவருடைய ஏடுகளிலிருந்து பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| வங்கிமேல் வரை பற்று | 50,000 | சரக்கிருப்பு | 1,60,000 |
| கடனாளிகள் | 1,80,000 | கடனீந்தோர் | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுசீட்டு | 70,000 | செலுத்தற்குரிய மாற்றுசீட்டு | 2,40,000 |
| கணினி | 30,000 | கைரொக்கம் | 60,000 |
| இயந்திரம் | 3,00,000 | | |

அவ்வாண்டில் அவர் சொந்த பயனுக்கு ரூ.30,000 எடுத்து கொண்டார். அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ரூ.40,000 அவருடைய இலாபம் (அ) நட்டம் கண்டறியவும்.

**(அல்லது)**

b) பின்வரும் நடவடிக்கைகளை Tally ல் பதிவு செய்யவும்.

1. ராபர்ட்டு ரூ.1,00,000 முதலுடன் தொழில் தொடங்கினார்.
2. வங்கியில் ரூ.30,000 வைப்பு வைக்கப்பட்டது.
3. ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ரூ.10,000.
4. மொகைதினிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ரூ.20,000.
5. ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ரூ.8000.

42) a) கீழே கொடுக்கபட்டுள்ள தகவல்களிலிருந்து கோயம்புத்தூர் கிரிக்கெட் மன்றத்தின் 2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுகுரிய பெறுதல் செலுத்தல் கணக்கு தயார் செய்க.

| விவரம் | | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|---|
| வங்கிமேல் வரை பற்று (1.4.2018) | | 6,000 | மதிப்பூதியம் செலுத்தியது | 2,800 |
| | | | நீர் மற்றும் மின்சார கட்டணம் | 700 |
| கைரொக்கம் (1.4.2018) | | 1,000 | விளையாட்டு போட்டி செலவுகள் | 2,600 |
| மைதான பராமரிப்புக்காக | | | விளையாட்டு பொருள் வாங்கியது | 1,900 |
| கூலி செலுத்தியது | | 2,000 | விளையாட்டு போட்டி நிதி வரவுகள் | 5,200 |
| சந்தா பெற்றது | | | உயில் கொடை பெற்றது | 2,000 |
| முந்தைய ஆண்டு | 500 | | | |
| நடப்பு ஆண்டு | 9600 | | ரொக்க இருப்பு (31.3.2019) | 300 |
| எதிர்வரும் ஆண்டு | 400 | 10,500 | அரங்கம் அமைப்பதற்காக பெற்ற நன்கொடை | 2,000 |
| கூலி கொடுபட வேண்டியது | | 2,200 | | |
| கடன் மீதான வட்டி செலுத்தியது | | 2,000 | | |

**(அல்லது)**

b) கணக்கியல் சான்றாவணங்களின் வகைகளை விவரி.

43) a) கீழ்காணும் திருச்சி மன மகிழ் மன்றத்தின் பெறுதல் செலுத்தல் கணக்கிலிருந்து 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுகுரிய வருவாய் செலவின கணக்கை தயாரிக்கவும்.

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com


| பெறுதல்கள் | ரூ. | செலுத்தல்கள் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | அறைகலன் வாங்கியது | 10,000 |
| கைரொக்கம் | 11,000 | வாடகை | 2,800 |
| பங்காதாயம் பெற்றது | 27,600 | செயலர் மதிப்பூதியம் | 15,000 |
| பழைய செய்திதாள் விற்றது | 3,000 | தபால் செலவு | 1,700 |
| உறுப்பினர் சந்தா | 31,000 | பொது செலவு | 4,350 |
| பாதுகாப்பு பெட்ட வாடகை | 8,000 | அச்சு எழுது பொருள் | 45,000 |
| முதலீடு மீதான வட்டி | 1,250 | தணிக்கை கட்டணம் | 5,000 |
| அறைகலன் விற்றது | 5,000 | இறுதி இருப்பு | |
| (ஏட்டு மதிப்பு 4,400) | | கைரொக்கம் | 3,000 |
| | 86,850 | | 86,850 |

**(அல்லது)**

b) அகமது மற்றும் பஷீர் வழங்கிய முதல் முறையே ரூ.60,000 மற்றும் ரூ.40,000 அவர்கள் இலாப பகிர்வு விகிதம் 2:1 அவர்கள் முதல் மீது வட்டி கணக்கிடுவதற்கு முன் இலாபம் ரூ.5000. பின்வரும் நிலைகளில் முதல் மீதான வட்டி தொகையை கணக்கிடவும்.

(i) முதல் மீது வட்டி குறித்து கூட்டாண்மை ஒப்பாவணத்தில் ஏதும் குறிப்பிடாத போது

(ii) கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி முதல் மீது வட்டி 4% அனுமதிக்கபடும் போது

(iii) கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி முதல் மீது வட்டி 6% அனுமதிக்கபடும் போது

44) a) பின்வரும் தகவல்களில் இருந்து மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பை காணவும்.

(i) சராசரி இலாபம் ரூ.20,000

(ii) சாதாரண இலாப விகிதம் 10%

(iii) பயன்படுத்தபட்ட முதல் ரூ.1,50,000

**(அல்லது)**

b) பங்கு முதலின் பல்வேறு பிரிவுகள் யாவை?

45) a) ராஜேஷ் மற்றும் ரமேஷ் என்ற கூட்டாளிகள் 3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். இராமன் என்பவரை புதிய கூட்டாளியாக சேர்த்து கொண்டனர் சொத்துக்கள் மறுமதிப்பீடு செய்யபட்டன தேவையான குறிப்பேட்டு பதிவு தந்து மறுமதிப்பீட்டு கணக்கு தயாரிக்கவும்.

(a) கட்டிடத்தின் மதிப்பு ரூ.15,000 உயர்த்தபட்டது

(b) இயந்திரத்தின் மதிப்பு ரூ.4,000 குறைக்கபட்டது

(c) வாரா ஐயகடன் ஒதுக்கு ரூ.1,000 உருவாக்கபட்டது

**(அல்லது)**

b) தியாக விகிதத்திற்கும் ஆதாய விகிதத்திற்கும் உள்ள வேறுபாடு யாது?

46) a) தங்கம் நிறுமம் பங்கொன்றுக்கு ரூ.10 வீதம் 50,000 பங்குகளை பங்கொன்றுக்கு ரூ.2 வீதம் முனைமத்தில் வெளியிட்டது தொகை கீழ்கண்டவாறு செலுத்தபட வேண்டும்.

விண்ணப்பத்தின் போது ரூ.5

ஒதுக்கீட்டின் போது ரூ.5

முதல் மற்றும் இறுதி அழைப்பின்போது ரூ.2

அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டன. பிரியா என்பவருக்கு ஒதுக்கபட்ட 500 பங்குகள் மீதான ஒதுக்கீட்டு தொகை முதல் மற்றும் இறுதி அழைப்பு தொகை தவிர அனைத்து தொகையும் பெறபட்டது. அவருடைய பங்கு ஒறுப்பிழப்பு செய்யபட்டு அனைத்து பங்குகளும் தேவி என்பவருக்கு ரூ.8 வீதம் மறுவெளியீடு செய்யபட்டன. குறிப்பேட்டு பதிவு தருக.

**(அல்லது)**

b) சுந்தர், விவேக் மற்றும் பாண்டியன் என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 3:2:1 எனும் விகிதத்தில் பகிர்ந்து கொண்டனர் 2018 டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலை குறிப்பு பின்வருமாறு

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



2017 டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலை குறிப்பு

| பொறுப்புகள் | | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்கு | | | நிலம் | 80,000 |
| சுந்தர் | 50,000 | | சரக்கிருப்பு | 20,000 |
| விவேக் | 40,000 | | கடனாளிகள் | 30,000 |
| பாண்டியன் | 10,000 | 1,00,000 | வங்கி ரொக்கம் | 14,000 |
| பொதுகாப்பு | | 36,000 | இலாபநட்ட க/கு | 6,000 |
| கடனீந்தோர் | | 14,000 | (நட்டம்) | |
| | | 1,50,000 | | 1,50,000 |

1.1.2019 அன்று பாண்டியன் இறந்துவிட்டார் மற்றும் அவரின் இறப்பின் போது பின்வரும் சரிகட்டுதல் செய்யபுட்டன.

(i) சரக்கிருப்பின் மதிப்பு 10% குறைக்கபட வேண்டும்

(ii) நிலத்தின் மதிப்பு ரூ.11,000 அதிகரிக்க வேண்டும்

(iii) கடனாளிகள் மதிப்பு ரூ.3,000 குறைக்கபட வேண்டும்

(iv) பாண்டியனுக்கு செலுத்த வேண்டிய தொகை செலுத்தபடவில்லை

கூட்டாளி இறப்புக்கு பின் மறுமதிப்பீட்டு க/கு முதல் க/கு இருப்பு நிலை குறிப்பு தயார் செய்க.

47) a) குமார் நிறுமத்தின் பின்வரும் தகவல்களில் இருந்து போக்கு சதவிகிதங்களை கணக்கிடவும்.

| விவரம் | ரூ. ஆயிரத்தில் | | |
|---|---|---|---|
| | 2015-16 | 2016-17 | 2017-18 |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 300 | 270 | 150 |
| இதர வருமானம் | 50 | 80 | 60 |
| செலவுகள் | 250 | 200 | 125 |
| வருமான வரி | 40 | 40 | 40 |

**(அல்லது)**

b) இலக்குமி நிறுமத்தின் 2019 மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலை குறிப்பு பின்வருமாறு.

| விவரம் | ரூ. |
|---|---|
| **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | |
| I. பங்குதாரர் நிதி | |
| நேர்மை பங்கு முதல் | 4,00,000 |
| நீண்டகால கடன் | 2,00,000 |
| நடப்பு பொறுப்பு | |
| (a) குறுகியகால கடன் | 50,000 |
| (b) கணக்கு மூலம் செலுத்த வேண்டியவை | 3,10,000 |
| (c) கொடுபட வேண்டிய செலவு | 15,000 |
| (d) குறுகியகால ஒதுக்கு | 25,000 |
| மொத்தம் | 10,00,000 |
| II. சொத்துக்கள் | |
| நிலை சொத்துக்கள் | 4,00,000 |
| நடப்பு சொத்துக்கள் | |
| (a) சரக்கிருப்பு | 1,60,000 |
| (b) கடனாளிகள் | 3,20,000 |
| (c) ரொக்கம் | 80,000 |
| (d) முன்கூட்டி செலுத்திய செலவு | 40,000 |
| மொத்தம் | 10,00,000 |

(i) நடப்பு விகிதம் (ii) விரைவு விகிதம் கணக்கிடவும்.

----------

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com